**இயக்கஊர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| M.C.O.P.No. | 282/2022 | எ.ம.சா. | :1 |
| பெயர் | திரு. பூவண்ணன் | | |
| த/பெ. | : திரு. பழனிச்சாமி | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 38 | தொழில் | : |

**முதல்விசாரணை**

நான் சிறுவலூர் புதுக்காலனியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். 1ம் எதிர்மனுதாரர் மைனர் கீர்த்தனா எனது மகள். அவருக்கு வயது தற்போது 15. விபத்து சமயத்தில் என் மகளுக்கு வயது 11 இருக்கும். எனது காரின் பதிவு எண். TN 07 Q 2459. மேற்படி கார் எனக்கு சொந்தமானது. விபத்து சமயத்தில் நான்தான் காரின் உரிமையாளர். மேற்படி காரை வீட்டிற்கு முன்பாக கான்க்ரீட் பாதையில் நிறுத்தியிருந்தேன். விபத்து குறித்து என் உறவினர் தர்மராஜ் என்பவர் புகார் கொடுத்ததன்பேரில் வழக்கு பதிவுசெய்யப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து குறித்து முதல் தகவல் அறிக்கை எனக்கு எதிராக பதிவுசெய்யப்பட்டது. இறுதிஅறிக்கையும் எனக்கு எதிராக பதிவுசெய்யப்பட்டது என்றால்சரிதான்.

வாகனத்திற்கு காப்பீடு உள்ளது  என்றால் சரிதான்.